இந்நியதி நிபந்தனைகள் ("நியதிகள் மற்றும் நிபந்தனைகள்") நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி ("வங்கி") இனால் வழங்கப்படும் (இதனகத்துப்பின்னர் "Neos BIZ" எனக் குறிப்பீடு செய்யப்படும் மொபைல் பேங்கிங் சேவைகளினூடாக பயனுறுத்தப்படும் ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

வங்கியானது Neos BIZ ஊடாக கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளிப்பதற்குப் பிரதிபயனாக, நான் / நாம் இந்நியதி நிபந்தனைகளினால் பிணிக்கப்படுவதற்கு உடன்படுகின்றேன் / உடன்படுகின்றோம்.

1. வரைவிலக்கணங்கள்:-

இந்நியதி நிபந்தனைகளில் சந்தர்ப்பம் வேறுவகையாக தேவைப்படுத்துகின்ற அளவுக்குத் தவிர:

"வங்கி" என்பது, நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி, அதன் அடுத்துறுநர்கள் மற்றும் சாட்டுநர்கள் எனப் பொருள்படுதல் வேண்டும்.

"குறிக்கப்பட்ட மின்னஞ்சல்" என்பது, (வங்கியின் முறைமையில் ஏற்கனவே கிடைக்கக்கூடியதாகவுள்ள வாடிக்கையாளரின் மின்னஞ்சல் முகவரியுடன் ஒத்திருக்க வேண்டிய) (ஏற்புடையவாறு) விண்ணப்பம் மற்றும் சபைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளரின் மின்னஞ்சல் முகவரி எனப் பொருள்படும்.

"கணக்குகள்" என்பது, விண்ணப்பத்தில் நிரற்படுத்தப்பட்டவாறான அல்லது வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையில் வேறுவகையாக உடன்பட்டுக்கொள்ளப்பட்டவாறான எந்தக் கணக்குகள் தொடர்பில் இந்நியதிநிபந்தனைகள் ஏற்புடையனவாதல் வேண்டுமோ அந்தக் கணக்குகள் எனப் பொருள்படும்.

"அறிவித்தல்" என்பது, வங்கியினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் அல்லது வடிவத்தில் மொபைல் பேங்கிங் செயலியினூடாக அல்லது வேறுவகையாக வங்கியிடமிருந்து வாடிக்கையாளரினால் அல்லது எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட பயனரினால் பெறப்படும் Neos BIZ தொடர்பான ஏதேனும் அறிவித்தல், உறுதிப்படுத்துகை, அறிவுறுத்தல் அல்லது வேறு அனுப்புகை எனப் பொருள்படும்.

"விண்ணப்பம்" என்பது, வாடிக்கையாளரினால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட இந்நியதி நிபந்தனைகளுடன் சேர்த்து Neos BIZ மொபைல் பேங்கிங் விண்ணப்பப் படிவம் எனப் பொருள்படும்.

"அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்கள்" என்பது, வாடிக்கையாளரினால் தன் / தம் சார்பில் மொபைல் பேங்கிங் செயலியை அனுகுவதற்கும் அதனைப் பயன்படுத்துவதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட தனிநபர்கள் எனப் பொருள்படுதல் வேண்டும்.

"பயோமெட்ரிக்ஸ்" என்பது, அதிகாரமளிக்கப்பட்ட பயனர் மொபைல் பேங்கிங் செயலிக்குப் பதிகை புகும் (Login) நேரத்தில் தனது விருப்பத்தெரிவில் பயன்படுத்தக்கூடிய முக அடையாளம் மற்றும் விரல் பதிவு அடையாளம் எனப் பொருள்படுதல் வேண்டும்.

"பயோமெட்ரிக் பதிகைபுகுதல்" என்பது, வங்கியின் மொபைல் பேங்கிங் செயலியை அணுகுவதற்காக அதிகாரமளிக்கப்பட்ட பயனரின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு

பாதுகாப்புக் குறியீடொன்றாக வங்கியின் மொபைல் பேங்கிங் கடவுச்சொல்லுக்குப் பதிலாக குறிக்கப்பட்ட சாதனமொன்றில் பதிவுசெய்யப்பட்ட தனது முக அடையாளத்தை அல்லது விரல் பதிவை எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட பயனர் பயன்படுத்தக்கூடிய ஒரு சேவை எனப் பொருள்படுதல் வேண்டும்.

"சபைத் தீர்மானம்" என்பது, Neos BIZ சேவைகளை வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக வாடிக்கையாளர் பற்றி (ஏற்புடையவாறு) பணிப்பாளர்கள் / உறுப்பினர்கள் சபையினால் உரியமுறையில் நிறைவேற்றப்படும் தீர்மானம் / தீர்மானங்கள் எனப் பொருள்படும்.

"வாடிக்கையாளர்" என்பது, வங்கியினால் வழங்கப்படும் Neos BIZ சேவைகளைப் பயன்படுத்தும் வங்கியின் வாடிக்கையாளர்கள் எனப் பொருள்படும் என்பதுடன் இந்நியதிநிபந்தனைகளின் நோக்கங்களுக்காக ஏற்புடையதாகின்றவிடத்து வாடிக்கையாளரினால் நியமிக்கப்படும் அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்களையும் உள்ளடக்கும்.

"குறிக்கப்பட்ட சாதனம்" என்பது, அதிகாரமளிக்கப்பட்ட பயனர் பதிவுசெய்து Neos BIZ செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற தகவுடைய கைபேசிச் சாதனங்கள் மற்றும் இணைந்த சாதனம் எனப் பொருள்படும்.

"அறிவுறுத்தல்கள்" என்பது, இந்நியதி நிபந்தனைகளுக்கு இணங்கவும் வங்கியினாலும் வாடிக்கையாளரினாலும் காலத்துக்குக்காலம் உடன்பட்டுக்கொள்ளப்பட்டவாறான அத்தகைய படிவத்திலும் அல்லது வடிவத்திலும் மொபைல் பேங்கிங் செயலியினூடாக அல்லது வேறுவகையாக எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட பயனரிடமிருந்து வங்கியினால் பெற்றுக்கொள்ளப்படும் ஒரு கணக்கு அல்லது கணக்குகள் தொடர்பிலான ஏதேனும் அறிவுறுத்தல், தரவு அல்லது வேறு அனுப்புகை எனப் பொருள்படும்.

"முதன்மைக் கணக்கு" என்பது, வாடிக்கையாளரினால் குறிக்கப்படவேண்டிய வங்கியில் பேணப்படுகின்ற விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட ஒரு குறிப்பிட்ட கணக்கு எனப்பொருள்படும்.

"புலமைச் சொத்து உரிமை" என்பது, (பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத) ஏதேனும் பதிப்புரிமை, ஆக்கவுரிமை, வர்த்தகக் குறி, (பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத) சேவைக் குறி, வர்த்தக அல்லது வியாபாரப் பெயர், தரவுத்தள உரிமை, வடிவமைப்பு உரிமை, கணினி மென்பொருளைப் பயன்படுத்துவதற்கான உரிமை, இடவிளக்கவியல் உரிமை, வர்த்தக இரகசியம் மற்றும் உலகெங்கிலுமுள்ள வேறு ஒத்த எல்லா உரிமைகளும் எனப் பொருள்படும்.

"மொபைல் பேங்கிங் செயலி / Neos BIZ" என்பது, கைபேசிச் சாதனம் ஒன்றினூடாக கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் நோக்கத்துக்காக வங்கியினால் கிடைக்கக்கூடியதாக்கப்படும் ஒரு செயலி எனப் பொருள்படும்.

"மொபைல் பேங்கிங்" என்பது, காலத்துக்குக்காலம் வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது பயோமெட்ரிக்ஸ் இனைப் பயன்படுத்துவதன் மூலம் கைபேசிச் சாதனமொன்றில் நிறுவப்பட்ட கைபேசிச் செயலி ஒன்றினூடாக வங்கித்தொழில் கொடுக்கல்வாங்கல்களை மெய்யென உறுதிப்படுத்துதல் அத்துடன் / அல்லது அக்கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுதல் எனப் பொருள்படுதல் வேண்டும்.

"NEOS Pay" என்பது, வங்கியில் வைத்திருக்கப்படும் தமது கணக்குகளினூடாக வணிகருக்குக் கொடுப்பனவுகளைச் செய்வதற்காக வாடிக்கையாளர்களினால் பயன்படுத்தப்படமுடியுமான ஒரு QR குறியீட்டு அடிப்படையிலான கொடுப்பனவு முறை எனப் பொருள்படுதல் வேண்டும்; எவ்வாறாயினும்,

அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்களுக்கு விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டவாறு வாடிக்கையாளர்களினால் அவர்களுக்கு முன்னரே குறித்தளிக்கப்பட்ட வரையறைகளினுள் கொடுக்கல்வாங்கலைச் செய்வதற்கு அமைந்ததாகவிருக்கும்.

“OTP” என்பது, வங்கியினால் தோற்றுவிக்கப்படும் ஒரு முறை மாத்திரமான கடவுச்சொல் (OTP) எனப் பொருள்படுதல் வேண்டும்.

“கடவுச்சொல்” என்பது, ஒவ்வொரு அதிகாரமளிக்கப்பட்ட பயனரினதும் (விண்ணப்பத்தில் வாடிக்கையாளரினால் குறித்துரைக்கப்பட்ட) கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு SMS மூலம் வங்கியினால் தொடக்கத்தில் அனுப்பப்படும் கடவுச்சொல் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பயனரினால் அடுத்துப்பின்னர் உருவாக்கப்படும் கடவுச்சொல் எனப் பொருள்படும்.

“QR குறியீடு” என்பது, வணிகர்களினால் வழங்கப்படும் விரைவான பதில் குறியீடு எனப் பொருள்படுதல் வேண்டும்.

“சேவை வழங்குநர்” என்பது, தொலைத்தொடர்பாடல் வழங்குநர்கள், காப்புறுதிக் கம்பெனிகள், நீர்வழங்கல் கம்பெனிகள் மற்றும் மின்சார விநியோகக் கம்பெனிகள் முதலியன போன்ற எவரேனும் மூன்றாம் திறத்தவரான பயன்பாட்டு வழங்குநர் எனப் பொருள்படுதல் வேண்டும்.

“வேலை நாள்” என்பது, இலங்கையில் உள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் அலுவலுக்காக திறக்கப்படுகின்ற ஒரு நாள் எனப் பொருள்படும்.

“பயனர் ID” என்பது, ஒவ்வொரு அதிகாரமளிக்கப்பட்ட பயனருக்கும் வங்கியினால் உருவாக்கப்பட்டு வங்கியில் ஏற்கனவே கிடைக்கக்கூடியதாகவிருக்கும் வாடிக்கையாளரின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும் தனித்துவமான பயனர் அடையாளம் எனப் பொருள்படுதல் வேண்டும். (ஏற்புடையவாறு) முறையான அதிகாரமளிக்கப்பட்ட பயனருக்கு / பயனர்களுக்கு முறையான பயனர் ID இனை அறிவிப்பது வாடிக்கையாளரின் பொறுப்பாதல் வேண்டும்.

2. மொபைல் பேங்கிங் செயலியைப் பயன்படுத்துவதற்கான உரிமை மற்றும் புலமைச்சொத்து உரிமைகள்

2.1 வங்கியானது, இந்நியதிநிபந்தனைகளின் நியதிகளுக்கு இணங்க மொபைல் பேங்கிங் செயலியைப் பயன்படுத்துவதற்கான பிரத்தியேகமற்ற உரிமையொன்றை வாடிக்கையாளருக்கு அளிக்கின்றது.

2.2 மொபைல் பேங்கிங் செயலிக்கான அல்லது தொடர்புபட்ட பொருளுக்கான உரித்து அல்லது சொத்தாண்மை அக்கறை அல்லது அவற்றிலான புலமைச் சொத்து உரிமை எதுவும் வாடிக்கையாளருக்கு அளிக்கப்படுவதில்லை அல்லது வாடிக்கையாளரினால் கொள்ளப்படுதலாகாது.

2.3 வாடிக்கையாளர், வரையறையின்றி தகவல்களின் மறைகுறியாக்கம் மற்றும் செலாவணிக் கட்டுப்பாடுகள் தொடர்பானவை உட்பட மொபைல் பேங்கிங் செயலி தொடர்பான எல்லா ஏற்புடையனவான சட்டங்கள் மற்றும் பணிப்புரைகளின் கீழும் தேவைப்படுத்தப்பட்ட தோதான எல்லா அரசாங்க, ஒழுங்குபடுத்தும் மற்றும் வேறு ஏற்புடையனவான உரிமங்கள், அனுமதிப்பத்திரங்கள் மற்றும் சம்மதங்களைப் பெற்றுப் பேணுதல் வேண்டும்.

3. மொபைல் பேங்கிங் செயலியில் வாடிக்கையாளர்கள் / அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்களைப் பதிவுசெய்தல்

3.1 மொபைல் பேங்கிங் செயலிக்கு வாடிக்கையாளர்கள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்களைப் பதிவுசெய்தலானது, அதிகாரமளிக்கப்பட்ட பயனர்களுக்கு குறித்தளிக்கப்பட வேண்டிய கொடுக்கல்வாங்கல்களின் உச்சவரம்புகள் மற்றும் (ஏற்புடையதாகின்றவிடத்து) நேரொத்த சபைத் தீர்மானம் உட்பட விண்ணப்பத்தில் வாடிக்கையாளரினால் குறிப்பிடப்பட்ட விபரங்களின் அடிப்படையில் வங்கியினால் நிறைவுசெய்யப்படும்.

3.2 வாடிக்கையாளர், Neos BIZ இற்கான பதிவுக்காகவும் Neos BIZ ஊடாக கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்காகவும் அல்லது அவை தொடர்பிலும் செம்மையானதும் பூரணமானதுமான தகவல்களை வங்கிக்கு வழங்குவதற்கு பொறுப்பேற்றல் வேண்டும். வாடிக்கையாளர் தன்னால் அவதானிக்கப்படும் ஏதேனும் பிழை, ஒவ்வாமை அல்லது விட்டுவிடுகை பற்றி உடனடியாக வங்கியின் கவனத்திற்குக் கொண்டுவருதல் வேண்டும்.

3.3 மொபைல் பேங்கிங் செயலியில் வாடிக்கையாளர்களின் / அதிகாரமளிக்கப்பட்ட பயனரின் / பயனர்களின் பதிவு நிறைவு செய்யப்படுவதன் மேல், வங்கியானது முறையான அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்களுக்கான பயனர் ID களை உருவாக்கி (ஏற்கனவே வங்கியில் கிடைக்கக்கூடியதாகவுள்ள வாடிக்கையாளரின் மின்னஞ்சல் முகவரியுடன் ஒத்திருக்கவேண்டிய) (ஏற்புடையவாறு) விண்ணப்பத்தில் மற்றும் சபைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளரின் குறிக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் ஒன்று என்ற வகையாக வாடிக்கையாளருக்கு சொல்லப்பட்ட பயனர் ID களை அறிவித்தல் வேண்டும். மேலும், ஏற்புடையவாறு முறையான அதிகாரமளிக்கப்பட்ட பயனருக்கு / பயனர்களுக்கு பயனர் ID இனை அறிவிப்பது வாடிக்கையாளரின் பொறுப்பாதல் வேண்டும்.

3.4 அதன் பின்னர், வங்கியானது விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட முறையான பயனர் / பயனர்களின் முறையான தொலைபேசி இலக்கத்துக்கு / இலக்கங்களுக்கு SMS மூலம் கடவுச்சொல்லை அனுப்புதல் வேண்டும்.

3.5 மேற்கூறப்பட்டவாறு வங்கியினால் பதிவுசெய்யப்படுதல் நிறைவுசெய்யப்படுவதன் மேல், அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்கள் தனது / தமது குறிக்கப்பட்ட சாதனத்தினூடாக Neos BIZ செயலியை பதிவிறக்கம் செய்தல் வேண்டும்; அச்சாதனம் முதலாவது பதிகை புகுதலின் (Login) போது வங்கியில் பதிவுசெய்யப்படும். அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்கள் Neos BIZ இற்கான தனது / தமது முதலாவது பதிகை புகுதலின் (Login) போது இந்நியதி நிபந்தனைகளுக்கு சம்மதமளித்து அவற்றை ஏற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதுடன் அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்களினாலான அத்தகைய ஏற்பு (திருத்தப்பட்டவாறாக) 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின் (ETA) நியதிகளின்படி “இலத்திரனியல் கையொப்பம்” ஒன்றாக கருதப்படுதலும் வேண்டும், அத்துடன் ETA இன் 17 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 11 ஆம் பிரிவின் நியதிகளின்படி வங்கிக்கும் அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்களுக்கும் இடையில் செல்லுபடியானதும் பிணிக்கப்படுகின்றதுமான ஒப்பந்தமொன்றை அமைத்துருவாக்குதல் வேண்டும்.

3.6 வங்கியானது, விண்ணப்பத்தைப் பின்பற்றி “Neos BIZ மொபைல் பேங்கிங் கணக்கு மற்றும் பயனர் சேர்ப்பு / நீக்குகைப் படிவத்தை” பயன்படுத்துவதன் மூலம், வாடிக்கையாளரின் பெயரில் திறக்கப்பட்ட ஏதேனும் கணக்கு / கணக்குகளை இணைத்தல் அல்லது நீக்குதல் மற்றும் பயனர்களை சேர்த்தல் அல்லது

நீக்குதல் வேண்டும். அத்தகைய இணைப்புக்கள் அல்லது நீக்குகைகள் வங்கியின் நிலவுகின்ற விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் காரணமாகவிருக்கலாம் என வாடிக்கையாளர் உடன்பட்டு ஒப்புக்கொள்கின்றார்.

3.7 தொழிலிலிருந்து நீக்கப்படுதல் முதலியன காரணமாக அதிகாரமளிக்கப்பட்ட பயனர்களின் ஏதேனும் உடனடி இடைநிறுத்துகை தேவைப்படுத்தப்படுகின்ற பட்சத்தில், வாடிக்கையாளர் அதுபற்றி உடனடியாக வங்கிக்கு அறிவித்தல் வேண்டும், அதன் மூலம் வங்கியானது மேலே வாசகம் 3.6 இல் கூறப்பட்டவாறு வாடிக்கையாளரினால் நிரந்தர இடைநிறுத்துகை கோரப்படும் வரை அடையாளங் காணப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட பயனர்களின் தற்காலிக இடைநிறுத்துகையை பயனுறுத்த முடியும். மேலும், மேலே கூறப்பட்ட எதுவும், அவ்வாறு செய்யுமாறு வாடிக்கையாளரிடமிருந்து வங்கி நியாயமான அறிவித்தலைப் பெற்றுக்கொள்வதன் மேல் அத்துடன் / அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்களை தொடர்ந்து வைத்திருத்தல் வாடிக்கையாளருக்கு தீங்கு விளைவிக்கும் என நம்புவதற்கான நியாயமான ஏதுக்களை வங்கி கொண்டிருப்பதன் மேல் Neos BIZ இல் அவ்வதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்களின் அணுகுகையை தற்காலிகமாக இடைநிறுத்துவதிலிருந்து வங்கியைத் தடுத்தலாகாது. எவ்வாறாயினும், ஏதேனும் காரணத்துக்காக சொல்லப்பட்ட தற்காலிக இடைநிறுத்துகைகளை பயனுறுத்துவதிலான எவையேனும் விடுபாடுகளுக்கு வங்கி பொறுப்பாதலாகாது என்பதுடன் வாடிக்கையாளர் அது தொடர்பில் வங்கியினால் ஏற்கநேரும் எவையேனும் இழப்புக்களுக்கு வங்கிக்கு நட்டோத்தரவாதமளித்தலும் வேண்டும்.

4. மொபைல் பேங்கிங் மூலமான கொடுக்கல்வாங்கல் பற்றிய அறிவுறுத்தல்கள் மற்றும் செய்திகள்

4.1 மொபைல் பேங்கிங் செயலிக்கான பதிகை புகுதலானது (Login) ஒன்றில் கடவுச்சொல்லை உள்ளிடுதல் அல்லது பயோமெட்ரிக்ஸ் முறை என்ற வகையாக அனுமதிக்கப்படுகின்றது; அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்கள் தனது / தமது சொந்தத் தற்றுணிபில் அதனைத் தீர்மானிக்கலாம்.

4.2 Neos BIZ ஊடாக அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்களிடமிருந்து வருவதாகக் கொள்ளப்படுகின்றனவும் வங்கியினால் பெறப்படுகின்றனவுமான எல்லா அறிவுறுத்தல்களையும் அல்லது செய்திகளையும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது அவற்றின் மீது செயலாற்றுவதற்கு வாடிக்கையாளர் இத்தால் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார்.

4.3 எவரேனும் மூன்றாம் திறத்தவரான சேவை வழங்குநருடன் கொடுக்கல்வாங்கல் ஒன்றைச் செய்முறைப்படுத்துவதற்கு தேவைப்படுத்தப்படுகின்ற வாடிக்கையாளரின் / அதிகாரமளிக்கப்பட்ட பயனரின் / பயனர்களின் விபரங்களைப் பகிர்வதற்கு வாடிக்கையாளர் இத்தால் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார்.

4.4 வாடிக்கையாளர், Neos BIZ ஊடாக பரிமாறப்படும் இலத்திரனியல் செய்திகளை முடிவானதும் வாடிக்கையாளரின் மீது பிணிக்கப்பட்டதுமானதாக ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

4.5 எவ்வகையில் பயனுறுத்தப்படினும் Neos BIZ இனைப் பயன்படுத்தி செய்முறைப்படுத்தப்படும் அல்லது பயனுறுத்தப்படும் எல்லாக் கொடுக்கல்வாங்கல்களுக்குமான முழுப் பொறுப்பை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

4.6 Neos BIZ இற்குப் பதிவுசெய்வதன் மேல், வாடிக்கையாளரினால் பேணப்படும் கணக்குகள் மொபைல் பேங்கிங் செயலிக்கு தொடுக்கப்படும் என வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கின்றார்.

4.7 வாடிக்கையாளர், வங்கியில் பேணப்படும் தனது கணக்குகளுள் ஒன்றை, விண்ணப்பத்தில் அதனைக் குறிப்பாகக் குறிப்பிடுவதன் மூலம் முதன்மைக் கணக்காகக் குறித்தல் வேண்டும்.

4.8 கீழே 8 ஆம் வாசகத்தின் (விதிப்பனவுகள் மற்றும் கொடுப்பனவுகள்) கீழ், குறிப்பிடப்பட்டவாறு கொடுக்கல்வாங்கலுடன் இணைந்த வேறு விதிப்பனவுகள் உள்ளடங்கலாக போதிய நிதி வாடிக்கையாளரின் குறிக்கப்பட்ட முதன்மைக் கணக்கில் அல்லது வேறு ஏதேனும் கணக்கில் (கணக்குகளில்),

கிடைக்கக்கூடியதாகவிருந்தாலொழிய, வாடிக்கையாளர் / அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்கள் Neos BIZ ஊடாக கொடுக்கல்வாங்கல்களைப் பயனுறுத்துவதற்கு எத்தனித்தலாகாது. வாடிக்கையாளர் எவையேனும் கொடுப்பனவு அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளும் நேரத்தில் 8 ஆம் வாசகத்தின் கீழான மேலே குறிப்பிடப்பட்ட வேறு விதிப்பனவுகளுடன் சேர்த்து அத்தகைய அறிவுறுத்தல்களை எதிர்கொள்வதற்கான போதிய நிதி இருந்தாலொழிய வாடிக்கையாளரின் அவ்வறிவுறுத்தல்களைச் செய்முறைப்படுத்துவதற்கான எவ்விதக்கடப்பாட்டின் கீழும் வங்கி இல்லை என அல்லது வங்கியானது அத்தகைய சந்தர்ப்பத்தில் கொடுப்பனவு செய்யப்படாமை பற்றிய அறிவித்தலை வாடிக்கையாளருக்கு வழங்குவதற்கு தேவைப்படுத்தப்படுவதில்லை என வாடிக்கையாளர் மேலும் உடன்படுகின்றார்.

4.9 வங்கியின் அலுவலர் ஒருவரினால் / அலுவலர்களினால் அதிகாரவளிப்பைத் தேவைப்படுத்தும் வாடிக்கையாளரின் கோரிக்கைகள் / அறிவுறுத்தல்கள் உடனடியாக அல்லது தன்னிச்சையாக பயனுறுத்தப்படாது எனவும் வங்கியானது, வாடிக்கையாளருக்கான அறிவித்தலுடன் அல்லது அறிவித்தலின்றி அதன் தனித் தற்றுணிபில் அத்தகைய அறிவுறுத்தல்களை அனுமதிப்பதற்கான அல்லது அனுமதிக்காமல் இருப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளது எனவும் வாடிக்கையாளர் உடன்படுதல் வேண்டும்.

4.10 வாடிக்கையாளர் சார்பில் கொடுப்பனவொன்றைச் செய்யும்போது, வங்கியானது வாடிக்கையாளரின் முகவர் ஒருவராகவோ அல்லது கொடுப்பனவு நெறிப்படுத்தப்படுகின்ற மூன்றாம் திறத்தவரின் முகவர் ஒருவராகவோ செயலாற்றுவதில்லை என வாடிக்கையாளர் உடன்படுகின்றார்.

4.11 எவ்வகையினவுமான வழிவகைகளைப் பயன்படுத்தி Neos BIZ மூலம் வாடிக்கையாளரினால் பயனுறுத்தப்படும் பயனர் செயற்பாடு மற்றும் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய பதிகைகளைப் பேணுவதற்கும் குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல் / செயற்பாடு ஒன்று பயனர் ID மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்துவதன் மூலம் பயனுறுத்தப்பட்டது என நிலைநாட்டும் அல்லது சரிபார்க்கும் நோக்கத்துக்காக அத்தகைய பதிவேடுகளைப் பயன்படுத்துவதற்கு வாடிக்கையாளர் வங்கிக்கு இத்தால் அதிகாரமளிக்கின்றார்.

4.12 சிவப்பு அறிவித்தல்களைக் கொடுத்துத்தீர்த்தல் போன்ற அவசர கொடுக்கல்வாங்கல்களைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு Neos BIZ கிடைக்கக்கூடியதாக்கப்படுதலாகாது என வாடிக்கையாளர் இத்தால் உடன்படுகின்றார்.

4.13 வாடிக்கையாளர், Neos BIZ ஊடாக செய்முறைப்படுத்தப்பட்ட எல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் பற்றிய வங்கியின் பதிவேடுகள் மற்றும் வங்கிக்கூற்றுக்கான எல்லா நோக்கங்களுக்காகவும் முடிவானதாகவும் வாடிக்கையாளர் மீது பிணிக்கப்படுவதாகவும் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். அத்தகைய பதிவேடுகளும் வங்கிக் கூற்றுக்களும் மூலப் படிவங்களாக இல்லை, எழுதப்பட்டதாக இல்லை, செவி வழிச்சான்று, அத்துடன் / அல்லது கணினி ஒன்றின் மூலம் / இலத்திரனியல் ரீதியில் தயாரிக்கப்பட்டன என்ற காரணத்தினால் மட்டும் சட்ட வழக்கு நடவடிக்கைகளில் சான்றாக அவை ஏல்தகவுடையதாவதை ஆட்சேபிக்காமல் இருப்பதற்கு வாடிக்கையாளர் உடன்படுகின்றார்.

4.14 (காலத்துக்குக்காலம் வங்கியினால் தீர்மானிக்கப்பட்டவாறு) வங்கியின் வரையறுக்கப்பட்ட நேரத்தின் பின்னர் Neos BIZ அல்லது வேறு ஏதேனும் வழி மூலம் மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்களின் பயனுறும் திகதி அதற்கடுத்த நாளாக இருத்தல் வேண்டும் என்பதை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

5. Neos Pay வசதி

5.1 Neos Pay வசதியைப் பயன்படுத்தி Neos BIZ ஊடாக பயனுறுத்தப்படும் கொடுக்கல்வாங்கல்களுக்கு வங்கி பொறுப்பாவதில்லை என வாடிக்கையாளர் உடன்படுதல் வேண்டும்.

5.2 வணிகர்களினால் வழங்கப்படும் QR குறியீட்டிலிருந்து பெறப்படும் தகவல்களின் செம்மை தொடர்பாக எவ்விதக் கடப்பாட்டையும் அல்லது பொறுப்பையும் வங்கி கொண்டிருப்பதில்லை என வாடிக்கையாளர் மேலும் உடன்பட்டு ஒப்புக்கொள்கின்றார்.

5.3 Neos Pay வசதி தொடர்பான எவையேனும் முறைப்பாடுகள் கீழே வாசகம் 16 இல் மேலும் விபரமாகக் கூறப்பட்ட முறைப்பாட்டு நடவடிக்கைமுறையின்படி கையாளப்படுதல் வேண்டும் என வாடிக்கையாளர் உடன்படுகின்றார்.

6. கொடுக்கல்வாங்கல்களின் பாதுகாப்பு

6.1 வாடிக்கையாளர் Neos BIZ இற்கு தீங்கு விளைவிக்கும் அச்சுறுத்தல்களுக்கு எதிரான போதிய பாதுகாப்பு வழிமுறைகளுடன் முறையாக தொழிற்படும் ஒழுங்கில் Neos BIZ இனைப் பயன்படுத்துவதற்கு அவசியமான குறிக்கப்பட்ட சாதனத்தை / சாதனங்களை பெற்றுப் பேணுவதற்கு (அத்துடன் ஏற்புடையவாறு பெறப்பட்டு பேணப்படுவதனைச் செய்விப்பதற்கும்) உடன்படுகின்றார் என்பதுடன் Neos BIZ ஐ அணுகுவதற்கு பழுதடைந்த, குறைபாடுடைய அல்லது பாதுகாப்பற்ற சாதனத்தை அத்துடன் / அல்லது மென்பொருளைப் பயன்படுத்தாமல் இருப்பதற்கு அல்லது வங்கிக்கு தீங்கிழைக்கும் ஏதேனும் முறையில் Neos BIZ ஐப் பயன்படுத்தாமல் இருப்பதற்கும் பொறுப்பேற்கின்றார்.

6.2 மொபைல் பேங்கிங் செயலியானது, ஒன்றில் பயோமெட்ரிக்ஸ் ஊடாக அல்லது ஒரு பயனர் ID மற்றும் ஒரு கடவுச்சொல்லைப் பயன்படுத்துவதன் மூலம் அணுகப்படமுடியும் என வாடிக்கையாளர் இத்தால் ஒப்புக்கொண்டு உடன்படுகின்றார்.

6.3 பயோமெட்ரிக்ஸ் மூலம் மொபைல் பேங்கிங் செயலிக்கான பதிகை புகுதலை (Login) இயலச்செய்வதானது அதே சாதனத்தில் பயோமெட்ரிக்ஸ் பதிவுசெய்யப்படுகின்ற எவரேனும் மூன்றாம் திறத்தவரும் மொபைல் பேங்கிங் செயலியை அணுகுவதனை இயலச்செய்யும் என வாடிக்கையாளர் மேலும் உடன்பட்டு விளங்கிக்கொள்கின்றார்.

6.4 மொபைல் பேங்கிங் செயலிக்கான தொடக்க அணுகுகையை உடனடுத்துப் பின்னரும் அதன் பின்னர் வங்கியினால் விதிக்கப்படுகின்றவாறு கிரமமான இடைவெளிகளிலும் கடவுச்சொல்லை மாற்றுவதற்கு வாடிக்கையாளர் இத்தால் உடன்படுகின்றார். ஒவ்வொரு கடவுச்சொல்லும் அதன் அதிகாரமளிக்கப்பட்ட பயனருக்கு மட்டுமே தெரியும் எனவும் எவ்வித எழுத்து வடிவத்திலும் அது பேணப்படவில்லை எனவும் அதிகாரமளிக்கப்பட்ட பயனர்கள் அவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு எல்லா நியாயமான வழிமுறைகளையும் எடுக்கின்றனர் எனவும் வாடிக்கையாளர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

6.5 வாடிக்கையாளர், எவரேனும் அதிகாரமளிக்கப்படாத நபருக்கு / நபர்களுக்கு வெளிவிடுவதிலிருந்து அல்லது அவர்களால் அணுகப்படுவதிலிருந்து அல்லது அவர்களால் பயன்படுத்தப்படுவதிலிருந்து Neos BIZ ஐப் பாதுகாப்பதற்கு (கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான எல்லாத்தரவுகளும் தகவல்களும் உட்பட) போதிய வழிமுறைகளை ஏற்பாடுசெய்து பேணுதல் வேண்டும்.

6.6 எவரேனும் ஆளினால் பயனர் ID மற்றும் கடவுச்சொல்லின் அதிகாரமளிக்கப்படாத பயன்பாடு பற்றிய ஏதேனும் செயல் அல்லது எத்தனிப்பு பற்றி அல்லது மூன்றாம் திறத்தவரொருவரின் பயோமெட்ரிக்ஸ் ஊடாக மொபைல் பேங்கிங் செயலிக்கான அதிகாரமளிக்கப்படாத அணுகுகை பற்றிய ஏதேனும் செயல்

அல்லது எத்தனிப்பு பற்றி வாடிக்கையாளருக்குத் தெரியவந்தால் வாடிக்கையாளர் அதுபற்றி உடனடியாக வங்கிக்கு அறிவித்தல் வேண்டும்.

6.7 மொபைல் பேங்கிங் செயலியின் பயனர் ID மற்றும் கடவுச்சொல்லை கண்டிப்பான இரகசியத்தன்மையுடன் வைத்திருப்பதற்கும் / அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்களிடம் வைத்திருக்கப்படுவதனைச் செய்விப்பதற்கும் எச்சூழ்நிலையின் கீழும் எந்நேரத்திலும் அதனை வெளிவிடாமல் இருப்பதற்கும் அல்லது எவரேனும் ஆள் அதனை அணுகுவதற்கு இடமளிக்காமல் இருப்பதற்கும் வாடிக்கையாளர் இத்தால் பொறுப்பேற்கின்றார். எல்லா நேரங்களிலும் Neos BIZ ஊடாக மேற்கொள்ளப்படும் எல்லாக் கொடுக்கல்வாங்கலும் பற்றி கண்டிப்பான இரகசியத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு வாடிக்கையாளர் மேலும் உடன்படுகின்றார்.

6.8 மொபைல் பேங்கிங் செயலி, பயனர் ID, கடவுச்சொல், குறிக்கப்பட்ட சாதனம் அல்லது வேறு மெய்யுறுதிப்படுத்தும் நடவடிக்கைமுறை ஆபத்துக்குட்படுத்தப்பட்டுள்ளது அல்லது ஆபத்துக்குள்ளாக்கப்பட்டிருக்கக்கூடும் அல்லது தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது அல்லது தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கக்கூடும் அல்லது அதுபற்றிய அறிவு இயைபான அதிகாரமளிக்கப்பட்ட பயனர் அல்லது வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட ஊழியர்களுள் ஒருவர் தவிர்ந்த எவரேனும் ஆளினால் கொள்ளப்பட்டுள்ளது அல்லது கொள்ளப்பட்டிருக்கக்கூடும் எனவும் எவையேனும் அறிவுறுத்தல்கள் அல்லது எவையேனும் நிதிசார் தகவல்கள் அல்லது அறிவுறுத்தல் ஒன்றைப் பின்பற்றிச் செய்யப்பட்ட ஏதேனும் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்கான ஏதேனும் தவறுகை அல்லது அவற்றைப் பெற்றுக்கொள்வதிலான தாமதம் உள்ளது எனவும் அல்லது ஒரு அறிவித்தல் அல்லது கொடுப்பனவு தொடர்பான எவையேனும் நிதிசார் தகவல்களை, தகவல்களை அனுப்புவதில் அல்லது பெற்றுக்கொள்வதில் அல்லது அவற்றைப் பயனுறுத்துவதில் ஏதேனும் அறியப்பட்ட அல்லது சந்தேகிக்கப்பட்ட பிழை அல்லது மோசடி அல்லது ஏதேனும் அறிவுறுத்தலின் ஏதேனும் செய்நிரலாக்கப் பிழை அல்லது குறைபாடு அல்லது அழிவு அல்லது இந்நியதிநிபந்தனைகளில் உள்ள எவையேனும் பாதுகாப்பு ஏற்பாடுகளின் ஏதேனும் மீறுகை அல்லது நிகழக்கூடிய சாத்தியமுள்ள மீறுகை உள்ளது எனவும் நம்புவதற்கான ஏதுக்களை வாடிக்கையாளர் கொண்டிருப்பின் அதுபற்றி உடனடியாக தொலைபேசி மூலமும் அதன்பின்னர் மின்னஞ்சல் மூலமும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படும் கடிதத்தின் மூலமும் வாடிக்கையாளர் வங்கிக்கு அறிவித்தல் வேண்டும்.

6.9 மேற்கூறப்பட்டவாறு 6.8 இல் உள்ள நிகழ்வுகளில் ஏதேனும் ஒன்று இடம்பெறுவதன் மேல், வாடிக்கையாளர், பரிகார வழிமுறைகளை எடுப்பதில் வங்கியின் அறிவுறுத்தல்களுடன் இணங்கியொழுகுவதற்கு தனது முழு முயற்சியைப் பயன்படுத்துதல் வேண்டும். பயனர் ID, கடவுச்சொல் சம்பந்தமான பாதுகாப்பின் மீறுகையொன்று பற்றி அறியவந்தவுடன், வாடிக்கையாளர் அத்தகைய பயனர் ID, கடவுச்சொல்லை மொபைல் பேங்கிங் செயலியிலிருந்து நீக்குதல் அல்லது நீக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும் என்பதுடன் வங்கியானது முறையான அறிவித்தலைப் பெறுவதன் மேல், மொபைல் பேங்கிங் செயலியானது அக்கடவுச்சொல்லினால் அணுகப்படமுடியாது என உறுதிப்படுத்துவதற்கான நியாயமான நடவடிக்கைகளை எடுத்தலும் வேண்டும். வாடிக்கையாளர் அத்தகைய மீறுகையிலிருந்து எழுகின்ற அல்லது அது தொடர்பாக இழக்கப்பட்ட அல்லது உரிமைகோரப்பட்ட ஏதேனும் தொகைக்குப் பொறுப்பாதல் வேண்டும்.

6.10 அதிகாரமளிக்கப்பட்ட எல்லாப் பயனர்களும், இந்நியதி நிபந்தனைகளில் உள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் உட்படவும் அவற்றுக்கு வரையறையின்றியும் இந்நியதி நிபந்தனைகளை மீளாய்வு செய்து,

விளங்கிக்கொண்டு அவற்றுடன் இணங்கியொழுகுகின்றனர் என வாடிக்கையாளர் உதிப்படுத்துதல் வேண்டும்.

7. பயோமெட்ரிக்ஸ் இன் பயன்பாடு

7.1 மொபைல் பேங்கிங் செயலிக்கு பதிகை புகுவதற்கான (Login) பயோமெட்ரிக்ஸ் இன் பயன்பாடு, அதிகாரமளிக்கப்பட்ட பயனரின் பயோமெட்ரிக்ஸ் குறிக்கப்பட்ட சாதனத்துக்கு பதிவுசெய்யப்படின் மட்டுமே அனுமதிக்கப்படுதல் வேண்டும் என வாடிக்கையாளர் இத்தால் உடன்படுகின்றார். அத்தகையதாக, குறிக்கப்பட்ட சாதனத்துக்கு பயோமெட்ரிக்ஸ் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒரே நபர் / நபர்கள் அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்கள் மட்டுமே என வாடிக்கையாளர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

7.2 அதிகாரமளிக்கப்பட்ட பயனரின் கைபேசிச் சாதனம் / குறிக்கப்பட்ட சாதனத்தில் தேக்கிவைக்கப்பட்ட பயோமெட்ரிக்ஸ் சான்றாவணங்கள் அவரது சொந்தமானது என வாடிக்கையாளர் உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் அதிகாரமளிக்கப்பட்ட பயனரின் / பயனர்களின் குறிக்கப்பட்ட சாதனத்தில் எவரேனும் மூன்றாம் திறத்தவரின் பயோமெட்ரிக்ஸ் சான்றாவணங்கள் தேக்கிவைக்கப்படவில்லை எனவும் அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்கள் மொபைல் பேங்கிங் செயலிக்கு பதிகை புகுவதற்கு (Login) அவரது / அவர்களது சொந்த பயோமெட்ரிக் சான்றாவணங்களை மட்டுமே பயன்படுத்துதல் வேண்டும் எனவும் உறுதிப்படுத்துதல் வேண்டும். வாடிக்கையாளர், குறிக்கப்பட்ட சாதனத்தில் மூன்றாம் திறத்தவரின் பயோமெட்ரிக்ஸ் இனை தேக்கிவைப்பதுடன் இணைந்த ஆபத்துக்களையும் அவற்றின் மூலம் கொடுக்கல்வாங்கலின் பாதுகாப்பு ஆபத்துக்குட்படுத்தப்படலாம் என்பதையும் மேலும் விளங்கிக்கொண்டு ஒப்புக்கொள்கின்றார்.

7.3 அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்களுக்கு முழுதொத்த உடன்பிறந்தவர் ஒருவர் இருப்பின் அவ்வதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்கள் மெய்யென உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக முக அங்கீகாரத்தைப் பயன்படுத்துதலாகாது; இவ்விடயத்தில் அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்கள் மொபைல் பேங்கிங் செயலிக்கு பதிகை புகுவதற்கு (Login) பயோமெட்ரிக்ஸ் இற்குப் பதிலாக கடவுச்சொல்லைப் பயன்படுத்துதல் வேண்டும்.

7.4 வாடிக்கையாளர் / அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்கள், மெய்யென உறுதிப்படுத்தும் நோக்கங்களுக்காக அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்களின் பயோமெட்ரிக் சான்றாவணங்களின் பயன்பாட்டின் பாதுகாப்பை வேறுவகையாக ஆபத்துக்குட்படுத்துகின்ற வகையில் அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்களின் குறிக்கப்பட்ட சாதனத்தினால் வழங்கப்படும் ஏதேனும் தொழிற்பாட்டை இயலாமலாக்குவதற்கான ஏதேனும் நடவடிக்கையை எடுத்தலாகாது அத்துடன் / அல்லது அதன் எவையேனும் அமைப்புகளுக்கு (Settings) உடன்படுதலாகாது என வாடிக்கையாளர் உடன்படுகின்றார் (உ+ம் முக அங்கீகாரத்துக்கு “attention - aware” என்பதை இயலாமலாக்குதல்.)

7.5 அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்களின் முக / விரல் பதிவு அடையாளத்தின் பாதுகாப்பு அல்லது வேறு பாதுகாப்புக் குறியீடு ஆபத்துக்குள்ளாக்கப்பட்டுள்ள பட்சத்தில், வாடிக்கையாளர் அல்லது வாடிக்கையாளர் ஊடாக அதிகாரமளிக்கப்பட்ட பயனர் உடனடியாக வங்கிக்கு அறிவித்தல் வேண்டும்; அச்சந்தர்ப்பத்தில் வங்கியானது பயனர் ID இனை செயற்படுத்தாது நிறுத்துதல் வேண்டும். வாடிக்கையாளர் பயனர் ID இனை மீளச் செயற்படுத்துவதற்கு விரும்புகின்ற பட்சத்தில், வாடிக்கையாளர் மிகக்கிட்டிய வங்கிக் கிளைக்கு எழுத்திலான கோரிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

7.6 பயோமெட்ரிக் மூலமான பதிகை புகுதல் (Login) நோக்கங்களுக்காக, அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்களின் குறிக்கப்பட்ட சாதனத்தில் பதிவுசெய்யப்பட்ட முக / விரல் பதிவு அடையாளத்தை மொபைல் பேங்கிங் செயலி அணுகுகைக்கு உட்படுத்தும் என வாடிக்கையாளர் ஒப்புக்கொண்டு உடன்படுதல் வேண்டும் என்பதுடன் பயோமெட்ரிக் மூலமான பதிகை புகதலை (Login) வழங்குவதற்கு வங்கி அத்தகைய தகவலை அணுகுவதற்கும் பயன்படுத்துவதற்கும் வாடிக்கையாளர் சம்மதமளித்தலும் வேண்டும்.

7.7 அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்களின் குறிக்கப்பட்ட சாதனத்தைப் பாதுகாப்பதற்கான தேவையை வாடிக்கையாளர் இத்தால் ஒப்புக்கொள்கின்றார் என்பதுடன் பயோமெட்ரிக் மூலமான பதிகை புகுதலை (Login) அணுகுவதற்கு (வாடிக்கையாளரினால் / அதிகாரமளிக்கப்பட்ட பயனரினால் அல்லது வேறுவகையாக அதிகாரமளிக்கப்படினும் அல்லது அதிகாரமளிக்கப்படாவிடினும்) அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்களின் குறிக்கப்பட்ட சாதனத்தின் எல்லாப் பயன்பாட்டிற்கும் பொறுப்பாகவிருத்தலும் வேண்டும்.

7.8 இந்நியதிநிபந்தனைகளுக்கு மேலதிகமாகவும் அவற்றில் உள்ள பொறுப்புத்துறப்புக்களை குறைக்காமலும் பொறுப்பைத் தவிர்க்காமலும், குறிக்கப்பட்ட சாதனத்தின் முக / விரல் பதிவை மெய்யென உறுதிப்படுத்தும் தொகுதி வங்கியினால் வழங்கப்படுவதில்லை எனவும் வங்கியானது, ஏதேனும் குறிக்கப்பட்ட சாதனத்தின் முக / விரல் பதிவை மெய்யென உறுதிப்படுத்தும் தொழிற்பாட்டின் பாதுகாப்பு பற்றியும் சாதனத்தின் உற்பத்தியாளர் முன்வைக்கின்ற அதே முறையில் அது தொழிற்படுகின்றதா என்பது பற்றி எவ்வித முன்வைப்பையும் செய்யாது அல்லது நம்புறுதியளிக்காது என வாடிக்கையாளர் இத்தால் ஒப்புக்கொள்கின்றார்.

7.9 பயோமெட்ரிக் மூலமான பதிகை புகுதலானது (Login) எல்லா நேரங்களிலும் அணுகப்படக்கூடியதாகவிருக்கும் அல்லது ஏதேனும் இலத்திரனியல் சாதனம், மென்பொருள், உட்கட்டமைப்பு அல்லது வங்கி காலத்துக்குக்காலம் வழங்குகின்றவாறான வேறு இலத்திரனியல் வங்கிச்சேவைகளுடன் தொழிற்படும் என வங்கி குறிப்பீடு செய்யாது அல்லது நம்புறுதியளிக்காது.

7.10 ஏற்புடையனவான சட்டங்கள் வங்கியின் பொறுப்பை தவிர்ப்பதிலிருந்து அல்லது வரையறுப்பதிலிருந்து வங்கியைத் தடைசெய்தாலொழிய, பயோமெட்ரிக் மூலமான பதிகை புகுதலின் (Login) பயன்பாடு அல்லது எத்தனிக்கப்பட்ட பயன்பாடு அல்லது பயோமெட்ரிக் மூலமான பதிகை புகுதல் ஊடாக அல்லது அது தொடர்பில் வாடிக்கையாளரின் / அதிகாரமளிக்கப்பட்ட பயனரின் அறிவுறுத்தல்கள் அல்லது எவையேனும் அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் வாடிக்கையாளரினால் ஏற்கநேர்ந்த ஏதேனும் இழப்புக்கு வங்கி பொறுப்பாவதில்லை.

7.11 பயோமெட்ரிக் பதிகைபுகுதலின் ஏதேனும் முறையற்ற பயன்பாடு தொடர்பாக வங்கி ஏற்கநேரும் எல்லா இழப்புக்களுக்கும் வாடிக்கையாளர் வங்கிக்கு நட்டோத்தரவாதமளித்தல் வேண்டும்.

8. விதிப்பனவுகள் மற்றும் கொடுப்பனவுகள்

வங்கியினால் தீர்மானிக்கப்பட்டு வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் / வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படும் வங்கியின் கட்டண அட்டவணையில் பதிவிடப்பட்டவாறான வீதங்களில் வங்கியினால் தீர்மானிக்கப்பட்டவாறு Neos BIZ ஊடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான கட்டணமொன்றையும் Neos BIZ இன் பயன்பாடு தொடர்பில் வசதிக் கட்டணங்கள், சட்ட விதிப்பனவுகள் மற்றும் நியதிச்சட்ட விதிப்பனவுகள் எவையேனும் இருப்பின் அவை உட்பட வேறு செலவுகளையும் அறவிடுவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது

என வாடிக்கையாளர் இத்தால் சம்மதமளிக்கின்றார். வாடிக்கையாளர், வாடிக்கையாளரின் குறிக்கப்பட்ட முதன்மைக் கணக்குக்கு பற்றுவைப்பதற்கு அல்லது அத்தகைய முதன்மைக் கணக்கு மூடப்படுகின்ற, செயலற்றதாக இருக்கின்ற, தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் காரணமாக கிடைக்கக்கூடியதாகவிராத அல்லது அக்கணக்கில் போதிய நிதி இல்லாத பட்சத்தில், மேற்கூறப்பட்ட விதிப்பனவுகளுடன் சேர்த்து போதிய நிதியுடைய வேறு ஏதேனும் கணக்குக்கு (கணக்குகளுக்கு) பற்றுவைப்பதற்கு இத்தால் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார்.

9. தனிப்பட்ட தரவுகள்

சட்டத்தினால் அல்லது பணிப்புரையினால் தேவைப்படுத்தப்படுகின்றவிடத்து, வாடிக்கையாளர், மொபைல் பேங்கிங் செயலி தொடர்பாக அல்லது வேறுவகையாக, தனிப்பட்ட தகவலின் ஏதேனும் பயன்பாடு அல்லது ஒப்பிடல் மற்றும் வங்கியினால் அல்லது அதன் ஊழியர்கள் எவரினாலும் தனிப்பட்ட தரவின் சர்வதேச பரிமாற்றத்துக்கு எல்லா இயைபான அதிகாரமளிக்கப்பட்ட பயனர்கள், பணஞ்செலுத்தப்பெறுபவர்கள், வேறு மூன்றாம் திறத்தவர்கள், அரசாங்க முகவராண்மைகள் மற்றும் ஒழுங்குபடுத்தும் அதிகாரிகளிடமிருந்து எழுத்திலான சம்மதத்தினையும் வேறு எல்லா அவசியமான அங்கீகாரங்களையும், உரிமங்களையும் மற்றும் அனுமதிப்பத்திரங்களையும் பெறுதல் (அத்துடன் பேணுதல்) வேண்டும். வாடிக்கையாளர், வங்கி நியாயமான முறையில் தேவைப்படுத்துகின்றவாறு அத்தகைய சம்மதங்கள், அங்கீகாரங்கள், உரிமங்கள் மற்றும் அனுமதிப்பத்திரங்களின் மூலப்பிரதிகள், பிரதிகள் அல்லது வேறு சான்றை கோரிக்கையின் மீது வங்கிக்கு வழங்குதல் வேண்டும்.

10. அதிகாரவளிப்பு மற்றும் அறிவுறுத்தல்களை நிறைவேற்றுதல்

10.1 அறிவுறுத்தலொன்றின் பெறுகையொன்று மொபைல் பேங்கிங் செயலியினால் ஒப்புக்கொள்ளப்படும் போது மட்டுமே அத்தகைய அறிவுறுத்தலை வங்கி பெற்றுக்கொண்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், இவ்வாசகம், வாசகம் 10.5 இன் கீழ் அறிவுறுத்தல்களை நிறைவேற்றாமல் இருப்பதற்கான வங்கியின் தற்றுணிபைப் பாதித்தலாகாது.

10.2 வங்கியானது, தொடர்புபட்ட அறிவுறுத்தலொன்றின் நம்பகத்தன்மையின் போதிய எண்பிப்பாக கடவுச்சொல் ஒன்றின் மீது அத்துடன் / அல்லது பயோமெட்ரிக் மூலமான பதிகை புகுதலின் மீது உறுதியாக நம்பியிருக்கலாம்.

10.3 மேலே 10.1 மற்றும் 10.2 ஆகிய வாசகங்களில் தரப்பட்ட ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, இந்நியதி நிபந்தனைகளில் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில், மொபைல் பேங்கிங் செயலி ஊடாக வங்கியை வந்தடைகின்ற எவையேனும் அறிவுறுத்தல்கள் அல்லது வேறு அறிவித்தல்களின் நம்பகத்தன்மை மீதும் அவற்றிற்கான உரிய அதிகாரவளிப்பின் மீதும் வங்கி உறுதியாக நம்பியிருக்கலாம் என்பதுடன் வங்கியானது அவ்வறிவுறுத்தல்களை அத்துடன் / அல்லது வேறு அறிவித்தல்களை நிறைவேற்றுவதற்கு வாடிக்கையாளரினால் உரியமுறையில் அதிகாரமளிக்கவும்படுகின்றது.

10.4 வங்கியானது, இந்நியதி நிபந்தனைகளின்கீழ் மற்றும் வாடிக்கையாளருடனான வேறு எவையேனும் நியதி நிபந்தனைகளின்கீழ் அறிவுறுத்தல்களைப் பயனுறுத்துவதில் மற்றும் வேறுவகையாக அதன் கடப்பாடுகளைப் புரிவதில், பிரதிநிதிகள், இடையீட்டாளர்கள் மற்றும் வேறு மூன்றாம் திறத்தவர்களைப் பயன்படுத்தலாம் என்பதுடன் தொடர்பாடல்கள் மற்றும் தரவு அனுப்புகை முறைமைகள் அத்துடன் சேவை வழங்குநர்களைத் தெரிவு செய்து பயன்படுத்தலாம். இவ்வாசகத்தின் கீழான வங்கியின் உரிமைகள், வேறு எவையேனும் நியதி நிபந்தனைகளின்கீழ் அல்லது வேறு வகையாக வங்கி கொண்டிருக்கக்கூடிய அத்தகைய வேறு எவையேனும் உரிமைகளுக்கு மேலதிகமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவற்றைத்

தரம் குறைப்பதாக இருத்தலாகாது.

10.5 நியாயமானமுறையில் செயலாற்றும் வங்கியானது, அது அவசியமானது அல்லது உகந்தது எனக் கருதுகின்ற சூழ்நிலைகளில், அறிவுறுத்தல்களுள் எவற்றையும் அல்லது எல்லாவற்றையும் நிறைவேற்றுதலாகாது அல்லது அவற்றின் மீது வேறுவகையாக செயலாற்றுதல் ஆகாது, எவ்வாறாயினும் அதுபற்றி அதிகாரமளிக்கப்பட்ட பயனர்களுக்கு அறிவித்தல் வழங்கப்படுதல் வேண்டும்.

11. மொபைல் பேங்கிங் செயலியின் செயல்நிறைவேற்றம், பேணுகை மற்றும் அணுகுகை

11.1 மொபைல் பேங்கிங் செயலியானது பிழையற்றதாக உள்ளது அல்லது பிழையற்றதாக இருக்கும், பழுதடையாமல் இருக்கும் அல்லது வாடிக்கையாளர் எதிர்பார்க்கின்ற குறிப்பிட்ட நோக்கங்களுக்கு அல்லது விளைவுகளுக்கு பொருத்தமாக இருக்கும் என அல்லது மொபைல் பேங்கிங் செயலியின் பயன்பாடு இடையீடு செய்யப்படாது என நம்புறுதியளிக்காது. வாடிக்கையாளர், வரையறையின்றி, சொத்தாண்மை, நோக்கத்துக்கான தகுதி மற்றும் செயல்நிறைவேற்றம் உட்பட இந்நியதி நிபந்தனைகளில் ஏற்பாடுசெய்யப்படாத எவையேனும் நம்புறுதிகளை இத்தால் விட்டுக்கொடுக்கின்றார்.

11.2 வங்கியானது, இந்நியதி நிபந்தனைகளில் நோக்காகக்கொள்ளப்பட்ட செயல்நிறைவேற்ற மட்டங்களுடன் கணிசமானளவு அது இணங்கியொழுகின்றது என உறுதிப்படுத்தும் வகையில் (அவசியமேற்படின் மொபைல் பேங்கிங் செயலியின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் தொழிற்பாட்டை இடையீடு செய்தல் அல்லது இடைநிறுத்துதல் உட்பட) மொபைல் பேங்கிங் செயலியை இற்றைப்படுத்துவதற்கும் பேணுவதற்குமான எல்லா நியாயமான வழிமுறைகளையும் எடுத்தல் வேண்டும். அத்தகைய இற்றைப்படுத்தல் மற்றும் பேணுகையின் போது வாடிக்கையாளர் வங்கிக்கு முழுமையாக ஒத்துழைத்தல் வேண்டும் என்பதுடன் அது பற்றிய நேரம் வங்கியின் தனித் தற்றுணிபில் இருத்தல் வேண்டும்.

11.3 வங்கியானது, அவசியமேற்படின் வாடிக்கையாளரின் பதிவேடுகளைப் பேணுவதற்கும் மீள நிலைப்படுத்துவதற்கும் வாடிக்கையாளரை இயலச் செய்வதற்கு அவருக்கான எல்லா நியாயமான உதவிகளையும் வழங்குவதாக இருப்பினும், வாடிக்கையாளரினால் மொபைல் பேங்கிங் செயலிக்கு உள்ளீடுசெய்யப்படுகின்ற அல்லது அதனூடாக அனுப்பப்படுகின்ற எவையேனும் தகவல்களை அல்லது தரவுகளை பதிவதற்கும் பாதுகாப்பாக சேமிப்பதற்கும் வாடிக்கையாளர் பொறுப்பாதல் வேண்டும்.

12. பொறுப்பு மற்றும் நட்டோத்தரவாதம்

12.1 வாடிக்கையாளருக்கு / அதிகாரமளிக்கப்பட்ட பயனருக்கு / பயனர்களுக்கு வழங்கப்பட்ட அல்லது வாடிக்கையாளரினால் / வாடிக்கையாளரின் அறிவுடன் அல்லது அறிவின்றி அதிகாரமளிக்கப்பட்ட பயனரினால் / பயனர்களினால் பதிலீடு செய்யப்பட்ட பயனர் ID மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்துவதன் மூலம் ஏற்கநேர்ந்த அல்லது கொடுத்துத்தீர்க்கப்பட்ட ஏதேனும் இழப்பு அல்லது பொறுப்பிலிருந்து வாடிக்கையாளர் வங்கியை விடுவித்தல் வேண்டும்.

12.2 Neos BIZ ஊடாக வழங்கப்பட்ட எவையேனும் அறிவுறுத்தல்களை எத்தகையதுமான ஏதேனும் காரணத்துக்காக ஏற்றுக்கொள்ளாமையின் விளைவாக அத்துடன் / அல்லது அவற்றுக்கு அமைந்தொழுகாமையின் விளைவாக வாடிக்கையாளரினால் ஏற்கநேர்ந்த அல்லது அடையப்பட்ட ஏதேனும் இழப்புக்கு, சேதத்துக்கு அல்லது பொறுப்புக்கு வாடிக்கையாளர் வங்கியைப் பொறுப்பானதாக வைத்திருத்தலாகாது.

12.3 மூன்றாம் திறத்தவர்களுடனான விற்பனை அல்லது சேவைகளின் வழங்குகை ஒப்பந்தங்கள் தொடர்பில்

வாடிக்கையாளரினால் / அதிகாரமளிக்கப்பட்ட பயனரினால் / பயனர்களினால் Neos BIZ ஊடாகச் செய்யப்பட்ட கொடுப்பனவுகளின் விடயத்தில், வாடிக்கையாளர், மூன்றாம் திறத்தவர்களின் கடப்பாடுகளை எதிர்கொள்வதில் அவர்களின் தரப்பில் உள்ள எவையேனும் விடுபாடுகள் / தவறுகைகளுக்கு எத்தகையதுமான ஏதேனும் முறையில் வங்கியைப் பொறுப்பானதாக வைத்திருத்தலாகாது என வாடிக்கையாளர் உடன்படுதல் வேண்டும்.

12.4 எவையேனும் பண்டங்கள் அல்லது சேவைகள் தொடர்பில் வாடிக்கையாளரினால் / அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்களினால் செய்யப்பட்ட எவையேனும் கொடுப்பனவுகள் அடுத்துவரும் வேலை நாளின் இறுதியில் இற்றைப்படுத்தப்படும் என வாடிக்கையாளர் உடன்படுதல் வேண்டும் என்பதுடன் சேவை வழங்குநரின் தாமதங்களினால் ஏற்படுத்தப்படும் தாமதமான இற்றைப்படுத்தல்களுக்கு வங்கியைப் பொறுப்பானதாக வாடிக்கையாளர் வைத்திருத்தலுமாகாது.

12.5 குறிக்கப்பட்ட சாதனம் காணாமல் போதல் தொடர்பில் எவரேனும் ஆட்களினால் ஏதேனும் நேரத்தில் அல்லது காலத்துக்குக்காலம் குற்றவழக்கு தொடுக்கப்படக்கூடிய, அடையப்படக்கூடிய, ஏற்கநேர்ந்த, செய்யப்படக்கூடிய அல்லது முன்வைக்கப்படக்கூடிய (சட்ட மற்றும் வேறு செலவுதொகைகள், விதிப்பனவுகள் மற்றும் செலவுகள் எல்லாம் உட்பட) வழக்குகள், சேதங்கள், இழப்புக்கள், செலவுதொகைகள், செலவுகள், உரிமைக்கோரிக்கைகள், பொறுப்புக்கள் அல்லது கோரிக்கைகள் எல்லாவற்றுக்கும் எதிராக இல்லாதொழிக்கமுடியாத வகையில் வாடிக்கையாளர் வங்கிக்கு நட்டோத்தரவாதமளித்தல் வேண்டும்.

12.6 Neos BIZ தொடர்பான வங்கியின் முறைமைகள், காலத்துக்குக்காலம் வங்கிக்கு ஏற்புடையதாகக்கூடிய ஏதேனும் சட்டம், விதிகள், ஒழுங்குவிதிகள், வழிகாட்டுநெறிகள், சுற்றறிக்கைகள், நடத்தைக்கோவைகள் மற்றும் நிலவுகின்ற சந்தைச் செயன்முறைகளை கருத்திற்கொண்டு முறைமையைத் தொழிற்படுத்துவதிலான ஆபத்துக்களை முகாமைசெய்வதற்கான போதிய பாதுகாப்பு வடிவமைப்புக்களையும் கட்டுப்பாடுகளையும் கொண்டுள்ளன என உறுதிப்படுத்துவதற்கான நியாயமான நடவடிக்கைகளை வங்கி எடுக்கும் என வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கின்றார்.

12.7 வரையறையின்றி ஏதேனும் அரசிறை, இலாபங்கள் அல்லது சேமிப்புக்களின் இழப்பு உட்பட எவைனேும் இடைநேர்விளைவான, மறைமுகமான, விசேட, விளைவாந்தன்மையினவான அல்லது தண்டிக்கும் சேதங்களுக்கு வங்கியோ அல்லது எவரேனும் சேவை வழங்குநரோ வாடிக்கையாளருக்கு எச்சந்தர்ப்பத்திலும் பொறுப்பாதலாகாது என வாடிக்கையாளர் உடன்படுகின்றார்.

12.8 வங்கியின் மிக்க கவனயீனம் அல்லது வேண்டுமென்ற தவறுகை காரணமாகவிருந்தாலொழிய, வங்கி அல்லது அதன் ஊழியர்கள் எவரும் பின்வருவனவற்றிலிருந்து அல்லது அவை தொடர்பாக எழுகின்ற விளைவுகளுக்கு வாடிக்கையாளருக்கான ஏதேனும் பொறுப்பை அல்லது பொறுப்புடைமையை ஏற்றல் ஆகாது:

(i) வாடிக்கையாளர் / அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்படாத வேறு எவரேனும் ஆளினாலான Neos BIZ இன் பயன்பாடு அத்துடன் / அல்லது அத்தகைய பயன்பாட்டின் விளைவாக எவையேனும் தகவல்களுக்கான அணுகுகை,

(ii) வரையறையின்றி, ஏதேனும் தொடர்பாடல் வலையமைப்பின் தவறுகை, எவரேனும் மூன்றாம் திறத்தவரான சேவை வழங்குநர்களின் செயல் அல்லது செய்யாமை, பொறிமுறைத் தவறுகை, மின்சாரத் தவறுகை, சாதனத்தின் பிறழ் பயன்பாடு, உடைவு அல்லது போதியதாக இராமை, நிறுவுகை அல்லது வசதிகள் அல்லது (சட்டவலுவைக் கொண்டிருப்பினும் அல்லது

கொண்டிருக்காவிடினும்) ஏதேனும் சட்டம், விதிகள், ஒழுங்குவிதிகள், கோவைகள், பணிப்புக்கள், ஒழுங்குபடுத்தும் வழிகாட்டுநெறிகள் அல்லது அரசாங்கப் பணிப்புரைகள் உட்பட வங்கியின் நியாயமான கட்டுப்பாட்டுக்கு அப்பால் எவையேனும் செயல்கள், செய்யாமைகள் அல்லது சூழ்நிலைகளினால் ஏற்படுத்தப்பட்ட Neos BIZ இனை வழங்குவதிலான, அத்தகைய சேவைகள் தொடர்பான அறிவுறுத்தல்களை அல்லது தகவல்களை அனுப்புவதிலான அல்லது இணையத்தளத்துடன் (தளங்களுடன்) இணைப்பதிலான எவையேனும் தகவல்கள், இடைமறிப்பு, இடைநிறுத்துகை, தாமதம், இழப்பு, கிடைக்கக்கூடியதாக இராமை, சிதைவு அல்லது வேறு தவறுகை; அத்துடன்

(iii) வாடிக்கையாளர், சேவைகள் தொடர்பான எவையேனும் தகவல்களை அத்துடன் / அல்லது கொடுக்கல்வாங்கல்களை அனுப்புதல் அத்துடன் / அல்லது தேக்கிவைத்தல் அத்துடன் / அல்லது எவரேனும் தொடர்பாடல் வலையமைப்பு வழங்குநரின் ஏதேனும் முறைமை, சாதனம் அல்லது உபாயத்தினூடாக அல்லது அதில் Neos BIZ இனைப் பயன்படுத்துவதைப் பின்பற்றி வாடிக்கையாளரினால் / அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்களினால் மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கையாளுகைகள்.

12.9 வாடிக்கையாளர் / அதிகாரமளிக்கப்பட்ட பயனர் / பயனர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்படாத எவரேனும் நபர் Neos BIZ இற்கு பதிவுசெய்தல், பதிகை புகுதல் மற்றும் பயன்படுத்தல் அத்துடன் / அல்லது அத்தகைய பயன்பாட்டின் விளைவாக எவையேனும் தகவல்கள் அல்லது அறிக்கை அல்ல துவேறு ஏதேனும் தகவலுக்கான அணுகுகையிலிருந்து அல்லது அவை தொடர்பாக எழுகின்ற எல்லா விளைவுகளுக்கும் வாடிக்கையாளர் முழுமையாக ஆளாதலும் பொறுப்பாதலும் வேண்டும் எனவும் சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களது முறையான அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் எவரினாலும் ஏற்கநேரும் எவ்வகையினதுமான பொறுப்புக்கள், உரிமைக்கோரிக்கைகள், கோரிக்கை, இழப்புக்கள், சேதங்கள் பணம், விதிப்பனவுகள் மற்றும் செலவுகள் எல்லாவற்றுக்கும் எதிராகவும் அவை தொடர்பில் அவர்களினால் அல்லது அவர்களுக்கு எதிராக கொணரப்படக்கூடிய வழக்குகள் அல்லது வழக்குநடவடிக்கைகள் எல்லாவற்றுக்கும் எதிராகவும் அவர்களுக்கு நட்டோத்தரவாதமளித்தல் வேண்டும் எனவும் வாடிக்கையாளர் உடன்படுகின்றார்.

12.10 வாசகம் 3.2 இற்கு அமைய, வங்கியின் அல்லது அதன் ஊழியர்களின் மிக்க கவனயீனம் அல்லது வேண்டுமென்ற தவறுகையினால் ஏற்படுத்தப்பட்ட தவறவிடப்பட்ட அல்லது பிறழ்நெறிப்படுத்தப்பட்ட கொடுப்பனவின் விளைவாக Neos BIZ இன் பயன்பாட்டினூடாக மேற்கொள்ளப்பட்ட அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்களினால் ஏற்படுத்தப்பட்ட நிதிகளின் இழப்பு அல்லது இடந்தவறுகைக்கு வாடிக்கையாளர் பொறுப்பாதலாகாது.

12.11 வங்கி அல்லது அதன் ஊழியர்களின் தரப்பில் ஏதேனும் மிக்க கவனயீனம், மோசடி அல்லது வேண்டுமென்ற தவறுகை இன்றி இந்நியதிகளின்கீழ் Neos BIZ சேவையை வழங்குதல் அல்லது அதன்கீழ் வழங்கப்பட்ட எவையேனும் தகவல்கள் அல்லது அறிக்கை / அறிக்கைகள் தொடர்பாக அல்லது வங்கியின் தத்துவங்கள் மற்றும் உரிமைகளைப் பிரயோகிப்பதில் அல்லது பேணிக்காப்பதில், வங்கி, அதன் ஊழியர்கள் அல்லது சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களது முறையான அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் எவரினாலும் ஏற்கநேரும் எவ்வகையினவுமான பொறுப்புக்கள், உரிமைக்கோரிக்கைகள், கோரிக்கை, இழப்புக்கள், சேதங்கள், பணம், விதிப்பனவுகள் மற்றும் செலவுகள் எல்லாவற்றுக்கும் எதிராகவும் அவர்களினால் அல்லது அவர்களுக்கு எதிராக கொணரப்படக்கூடிய வழக்குகள் அல்லது

வழக்குநடவடிக்கைகள் எல்லாவற்றுக்கும் எதிராகவும் வாடிக்கையாளர் அவர்களுக்கு நட்டோத்தரவாதமளித்தல் வேண்டும்.

12.12 உதாரணமாக தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரிகள், சமூக வலையமைப்புக்கள் முதலியன போன்ற ஏதேனும் இலத்திரனியல் ஊடகத்தில் பயன்படுத்தப்படுகின்ற பொதுவான பயனர் ID மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி Neos BIZ ஐப் பயன்படுத்துவதன் காரணமாக எழக்கூடிய விளைவுகள் பற்றி வாடிக்கையாளர் முழுமையாக அறிந்துள்ளார் எனவும் அத்தகைய நிலைமைகளைத் தவிர்ப்பதற்கான தோதான முற்காப்பு வழிமுறைகளை எடுப்பார் எனவும் எவையேனும் பயனர் ID கள் / கடவுச்சொல் திருட்டுக்களுக்கு வங்கியைப் பொறுப்பாக வைத்திருக்கமாட்டார் எனவும் வாடிக்கையாளர் உடன்பட்டு ஒப்புக்கொள்கின்றார்.

12.13 இந்நியதி நிபந்தனைகள் வேறுவகையாக ஏற்பாடுசெய்கின்ற அளவுக்குத் தவிர, எத்தகையதுமான ஏதேனும் முறையில் Neos BIZ இனைப் பயன்படுத்தி வாடிக்கையாளரினால், அதிகாரமளிக்கப்பட்ட பயனர்களினால் அல்லது வாடிக்கையாளரின் அலுவலர்களினால், ஊழியர்களினால் அல்லது முகவர்களினால் நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்படுத்தப்படுகின்ற மொபைல் பேங்கங் செயலி தொடர்பிலான எவ்வகையினதுமான ஏதேனும் இழப்புக்காக அல்லது அது தொடர்பில் மற்றும் இலத்திரனியல் ரீதியில் அனுப்பப்படும் தரவுகளின் ஏதேனும் இழப்பு அத்துடன் / அல்லது பிறழ்நெறிப்படுத்துகைக்கு எதிராக அத்துடன் வங்கியானது எழுத்திலான கோரிக்கையொன்றின் மீது வாடிக்கையாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பயனர்களுக்கு மூலக் கடவுச்சொல்லை / கடவுச்சொற்களை அத்துடன் /அல்லது அடுத்துப்பின்னரான கடவுச்சொற்களை தோற்றுவிப்பதன் மற்றும் வழங்குவதன் காரணமாக (கவனயீனத்துக்காக ஒப்பந்தத்தில் அல்லது தீங்கியலில் அல்லது வேறுவகையாக) வங்கி பொறுப்பாதல் ஆகாது என வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கின்றார்.

13. முடிவுறுத்துகை

இந்நியதி நிபந்தனைகளில் அடங்கியுள்ளவை எது எவ்வாறிருப்பினும்,

13.1 வாடிக்கையாளர் Neos BIZ இன் பயன்பாட்டை முடிவுறுத்துவதற்கு தீர்மானிக்கின்றபட்சத்தில், வாடிக்கையாளர் அத்தகைய தீர்மானத்தை வங்கிக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன் அதுபற்றிய எழுத்திலான கோரிக்கையொன்றை மிக்க அண்மையில் உள்ள வங்கிக்கிளைக்கு சமர்ப்பித்தலும் வேண்டும்.

13.2 வங்கியானது அதன் முழுமையான தற்றுணிபில் வாடிக்கையாளருக்கான முன்னறிவித்தலுடன் Neos BIZ இனை இரத்துச் செய்தல், மீளப்பெறுதல் அல்லது புதுப்பித்தல் வேண்டும்.

13.3 (i) வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக தொடர்ச்சியான காலப்பகுதியொன்றிற்கு வசதிக் கட்டணம் செலுத்தப்படாவிடின் / வங்கியினால் அதனை அறவிடுவதற்கு போதிய நிதி கணக்குகளில் இல்லாவிடின்;

(ii) வங்கி அல்லது வாடிக்கையாளர் இந்நியதி நிபந்தனைகளின் கீழ் அதன் கடப்பாடுகளைப் புரிவதற்கு அல்லது அவற்றுடன் இணங்கியொழுகுவதற்கு எங்கேனும் உள்ள ஏதேனும் நியாயாதிக்கத்தின் ஏதேனும் விடயத்தில் (சட்டவலுவுடையதாக இருப்பினும் அல்லது இல்லாமல் இருப்பினும் ஆனால், சட்ட வலுவைக்கொண்டிராவிடின், பணிப்புரையுடனான இணங்கியொழுகுகை, பணிப்புரை எந்த ஆட்களுக்கு அல்லது உருவகங்களுக்கு ஏற்புடையதாவதற்கு உட்கருதப்படுகின்றதோ அந்த ஆட்கள் அல்லது உருவகங்களின்

பொதுவான செயன்முறைக்கு இணங்க இருப்பின் மட்டும்) ஏதேனும் முகவராண்மையின், ஏதேனும் அரசின் அல்லது ஏதேனும் சுய ஒழுங்குபடுத்தும் ஒழுங்கமைப்பின் ஏதேனும் ஏற்புடையதான சட்டம், பணிப்புரை, ஒழுங்குவிதி, கோரிக்கை, தேவைப்பாடு, விதி, தடை நிகழ்ச்சித்திட்டம், கொள்கை, வழிகாட்டுநெறி அல்லது அறிவித்தலுக்கு அது முரணாகவிருப்பின்;

(iii) எல்லாக் கணக்குகளையும் மூடிவிடுவதனைத் தொடர்ந்து,

மின்னஞ்சல் மூலமான முன்னறிவித்தலுடன் வாடிக்கையாளரின் / அதிகாரமளிக்கப்பட்ட பயனரின் / பயனர்களின் பயனர் ID ஐ செயலிழக்கச் செய்வதற்கும் Neos BIZ இலிருந்து வாடிக்கையாளரின் விபரக்குறிப்பை நீக்கிவிடுவதற்குமான உரிமையை வங்கி கொண்டுள்ளது என வாடிக்கையாளர் உடன்படுகின்றார்.

14. திருத்தம்

14.1 வங்கியானது, வாடிக்கையாளர்களுக்கான அறிவித்தலுடன் அதன் முழுமையான தற்றுணிபில் இந்நியதி நிபந்தனைகள் எவற்றையும் திருத்துவதற்கு, குறைநிரப்புவதற்கு அல்லது வேறுபடுத்துவதற்கு எந்நேரத்திலும் உரித்துடையதாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய திருத்தம், குறைநிரப்புகை அல்லது வேறுபடுத்துகை வாடிக்கையாளர் மீது பிணிக்கப்படுதலும் வேண்டும். நியதிநிபந்தனைகளின் இற்றைப்படுத்தப்பட்ட பதிப்பு (பதிப்புகள்) வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் கிடைக்கக்கூடியதாக்கப்படுதல் வேண்டும்.

14.2 வங்கியானது, Neos BIZ இன் பயன்பாட்டுக்கு இணைக்கப்பட்ட சிறப்புரிமைகளைத் தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன் வாடிக்கையாளருக்கான பொருத்தமான அறிவித்தலுடன் காலத்துக்குக்காலம் வங்கி கருதக்கூடியவாறாக, இதற்கு இணைக்கப்பட்ட இச்சிறப்புரிமைகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றுவதற்கான, வேறுபடுத்துவதற்கான, சேர்ப்பதற்கான அல்லது திருத்துவதற்கான முழுமையான தற்றுணிவையும் கொண்டிருத்தல் வேண்டும்.

14.3 Neos BIZ இன் பயன்பாடானது, Neos BIZ இனால் அல்லது வேறுவகையாக மேவப்படும் எல்லாச் சேவைகளையும், வசதிகளையும் மற்றும் கொடுக்கல்வாங்கல்களையும் ஆளும் வங்கியின் நிலவுகின்ற உறுப்புரைகள், நிபந்தனைகள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் எவையேனும் நியதிநிபந்தனைகளுக்கு அமைந்ததாதல் வேண்டும்.

15. நானாவிதமானவை

15.1 மீறுகை பற்றிய அறிவித்தல் மற்றும் புலமைச்சொத்து மீறுகை: வாடிக்கையாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பயனர் ஒருவரினால் அல்லது மூன்றாம் திறத்தவர் ஒருவரினால் இந்நியதி நிபந்தனைகளின் ஏதேனும் மீறுகை அல்லது இந்நியதி நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்ட வங்கியின் புலமைச்சொத்து உரிமைகளின் ஏதேனும் மீறுகை அல்லது மொபைல் பேங்கிங் செயலி மூன்றாம் திறத்தவர் ஒருவரின் உரிமைகளை மீறுகின்றது என்ற ஏதேனும் சார்த்துகை பற்றி வாடிக்கையாளர் அறியவந்தால் அல்லது அவை பற்றி சந்தேகிப்பதற்கான காரணத்தைக் கொண்டிருந்தால் வாடிக்கையாளர் உடனடியாக வங்கிக்கு அவை பற்றி அறிவித்தல் வேண்டும்.

15.2 தலைப்புக்கள் குறிப்பீட்டுக்காக மட்டும்:

இந்நியதி நிபந்தனைகளின் தலைப்புக்கள் இலகுவான குறிப்பீட்டுக்கு மட்டுமே என்பதுடன் இந்நியதிநிபந்தனைகளின் பொருள்கோடல் அல்லது அமைப்பை எவ்வகையிலும் பாதித்தலாகாது.

15.3 அறிவித்தல்கள்:

இந்நியதிநிபந்தனைகள் தொடர்பில் வாடிக்கையாளரினால் அல்லது வங்கியினால் வழங்கப்படவேண்டிய ஏதேனும் அறிவித்தல் வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பதிவிடப்படுதல் வேண்டும் என்பதுடன் விதிப்பனவுகள் / கட்டணங்கள் வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படும் வங்கியின் கட்டண அட்டவணையில் இற்றைப்படுத்தப்படுதலும் வேண்டும்.

16. விசாரணைகள் மற்றும் முறைப்பாடுகள்

16.1 Neos BIZ இன் பயன்பாடு தொடர்பில் ஏதேனும் முறைப்பாடு அல்லது விசாரணை வாடிக்கையாளருக்கு இருக்கின்றபட்சத்தில், வாடிக்கையாளர் 0094 112448888 என்ற இலக்கத்தினூடாக வங்கியின் 24 மணி நேர அழைப்பு மையத்துக்கு அழைப்பை ஏற்படுத்துதல் வேண்டும் அல்லது வங்கியின் கிளையொன்றுக்கு வருகைதருதல் வேண்டும். முறைப்பாடு தீர்க்கப்படாதிருப்பின், வாடிக்கையாளர் நிதி குறைகேள் அதிகாரி அல்லது இலங்கை மத்திய வங்கியினூடாக உதவியை நாடலாம்.

16.2 வங்கிக்கூற்றுத் திகதியிலிருந்து 14 நாட்களினுள் வாடிக்கையாளரினால் அவதானிக்கப்படும் கொடுக்கல்வாங்களில் உள்ள ஏதேனும் பிழை, ஒவ்வாமை அல்லது விட்டுவிடுகை பற்றி வங்கியின் கவனத்திற்கு வாடிக்கையாளர் கொண்டுவருதல் வேண்டும்.

17. ஆளும் சட்டம் மற்றும் நியாயாதிக்கம்:

17.1 இந்நியதி நிபந்தனைகள் இலங்கையின் சட்டங்களினால் ஆளப்படுதல் வேண்டும் என்பதுடன் அவற்றுக்கிணங்க பொருளமைத்துக்கொள்ளப்படுதலும் வேண்டும். இந்நியதி நிபந்தனைகள் அல்லது அவற்றுக்கான ஏதேனும் திருத்தம் அல்லது சேர்க்கை உட்பட உடன்படிக்கையிலிருந்து அல்லது அது தொடர்பாக எழுகின்ற ஏதேனும் பிணக்கு, அந்நோக்கத்துக்கான இலங்கை நீதிமன்றங்களின் பிரத்தியேகமான நியாயாதிக்கத்திற்கு முன்வைக்கப்படுதல் வேண்டும்.

17.2 மேற்கூறப்பட்டதை வாடிக்கையாளர் வாசித்து விளங்கிக் கொண்டார் என வாடிக்கையாளர் இத்தால் உறுதிப்படுத்தி உடன்படுகின்றார் என்பதுடன் Neos BIZ சேவையின் பயன்பாட்டின் விளைவாக எழுகின்ற விதிப்பனவுகள் உட்பட மேலேயுள்ள நியதி நிபந்தனைகளினால் பிணிக்கப்படுவதற்கும் உடன்படுகின்றார்.

17.3 வங்கியானது, ஏற்புடையனவான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க இலங்கை மத்திய வங்கியின் நிதி உளவறிதற் கூறுக்கு எவையேனும் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களையும் விதிக்கப்பட்ட தொடக்க நிலைக்கு மேலான கொடுக்கல்வாங்கல்களையும் அறிக்கையிடுதல் வேண்டும். வங்கியானது, இலங்கையில் நிலவுகின்ற எவையேனும் சட்டங்கள் அல்லது ஒழுங்குவிதிகளுக்கிணங்க ஏதேனும் நடவடிக்கையை எடுப்பதற்கு பொறுப்பாதலாகாது. எவ்வாறாயினும், அனுமதிக்கப்பட்ட தொடக்க நிலைக்கு மேலான ஏதேனும் கொடுக்கல்வாங்கல் வங்கியினால் தன்னிச்சையாக முடக்கப்படுதல் வேண்டும்.

17.4 வங்கியின் முக்கிய விடயங்கள் பற்றிய ஆவணங்களும் நியதி நிபந்தனைகளும் கூட்டாண்மை நிறுவனத்தின் இணையத்தளத்தில் கிடைக்கக்கூடியதாக்கப்படுதல் வேண்டும்.

18. குறித்தளிப்பு

18.1 வங்கியானது, இவ்விண்ணப்பத்தின் கீழான அதனது உரிமைகள், நன்மைகள் அத்துடன் / அல்லது கடப்பாடுகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எப்பாகத்தையும் எடுத்துரைப்பதற்கான, குறித்தளிப்பதற்கான அல்லது கைமாற்றுவதற்கான உரிமையைக் கொண்டுள்ளது எனவும் அத்தகைய

குறித்தளிப்பு வாடிக்கையாளர் மீது தொடர்ந்து பிணிக்கப்படுதல் வேண்டும் எனவும் வங்கியானது அதுபற்றி வாடிக்கையாளருக்கு அறிவித்தல் வேண்டும் எனவும் அத்தகைய எடுத்துரைப்பு, குறித்தளிப்பு அல்லது கைமாற்றுகை காரணமாக வாடிக்கையாளரின் உரிமைகள் குறைக்கப்படுகின்ற பட்சத்தில், வங்கியானது வாடிக்கையாளரின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும் எனவும் வாடிக்கையாளர் உடன்படுகின்றார்.

18.2 இந்நியதி நிபந்தனைகளின் கீழான வங்கியின் கடப்பாடுகள் சேவை மட்ட நியமங்களுடன் சேர்த்து வங்கியின் துணை நிறுவனங்கள், இணைக்கப்பெற்ற நிறுவனங்கள் அல்லது ஒப்பந்ததாரர்கள் எவருக்கும் குறித்தளிக்கப்படலாம் அல்லது அவற்றினால் நிறைவேற்றப்படலாம் என்பது தவிர, திறத்தவர் ஒருவர் மற்றைய திறத்தவரின் எழுத்திலான சம்மதமின்றி இந்நியதிநிபந்தனைகளின் கீழ் அவரது உரிமைகளை அல்லது கடப்பாடுகளை குறித்தளித்தலோ அல்லது கைமாற்றுதலோ ஆகாது.

18.3 நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி உடனான எமது தொடர்பு நாம் வாசித்து, எமக்குத் தெளிவுபடுத்தப்பட்டு நாம் விளங்கிக்கொண்ட நியதி நிபந்தனைகளுக்கு அமைந்ததாகும் என நாம் உடன்படுகின்றோம். உருவகத்தின் பங்காளர்கள் / பயனுகரி சொந்தக்காரர்களிலான ஏதேனும் மாற்றம் பற்றி எழுத்தில் உடனடியாக வங்கிக்கு அறிவிப்பதற்கு நாம் பொறுப்பேற்கின்றோம்.

19. வாடிக்கையாளரின் வெளிப்படுத்துகை

19.1 (இதனகத்துப்பின்னர் "வங்கி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி ஆனது Neos BIZ வசதியை எமக்கு வழங்குவதற்கு உடன்படுவதனைக் கருத்திற்கொண்டு, இந்நியதி நிபந்தனைகள் எம்மால் விளங்கிக்கொள்ளப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என நாம் இத்தால் உடன்படுகின்றோம் என்பதுடன் வங்கியின் Neos BIZ சேவைகளை ஆளும் எல்லா நியதி நிபந்தனைகளுக்கும் அமைந்தொழுகுவதற்கு நாம் உடன்படுகின்றோம். வங்கியானது எமது கோரிக்கைக்கு உடன்பட்டுக்கொள்வதன் மீது அதற்கு எதிராக எவ்வித ஆட்சேபனையையும் நாம் எழுப்பமாட்டோம் என நாம் வெளிப்படுத்துகின்றோம். வங்கியானது மொபைல் பேங்கிங் செயலி / Neos BIZ இன் அந்தரங்கத்தன்மை அத்துடன்/ அல்லது பாதுகாப்பை பாதிக்கும் எவையேனும் வெளிக்காரணிகளுக்கு எதிராக உத்தரவாதமளிக்காது என நாம் உடன்பட்டு ஒப்புக்கொள்கின்றோம். வங்கியானது எமது கோரிக்கையை ஏற்றுக்கொள்ளுதல் தொடர்பாக அல்லது அதிலிருந்து எழுகின்ற வழக்குகள், வழக்கு நடவடிக்கைகள், பொறுப்புக்கள், உரிமைக்கோரிக்கைகள், விடயங்கள், சேதங்கள், செலவுதொகைகள் மற்றும் செலவுகள் எல்லாவற்றுக்கும் எதிராக வங்கியை நட்டோத்தரவாதமளிக்கப்பட்டதாக வைத்திருப்பதற்கு நாம் உடன்படுகின்றோம். மொபைல் பேங்கிங் செயலி / Neos BIZ ஆபத்துக்குட்படுத்தப்பட்டுள்ளது அல்லது முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது என நாம் நம்பினால் அதுபற்றி உடனடியாக தொலைபேசி மூலமும் அதன்பின்னர் மின்னஞ்சல் மூலமும் அத்துடன் / அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படும் கடிதத்தின் மூலமும் நாம் வங்கிக்கு அறிவித்தல் வேண்டும் என நாம் வங்கிக்கு உறுதியளிக்கின்றோம். எல்லா அதிகாரமளிக்கப்பட்ட பயனர்களும் இந்நியதிநிபந்தனைகளில் உள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் உட்படவும் அவற்றுக்கு வரையறையின்றியும் அவற்றை விளங்கி அவற்றுடன் இணங்கியொழுகுகின்றார்கள் என நாம் மேலும் வெளிப்படையாக உடன்படுகின்றோம்.

19.2 வங்கியானது பின்வருவோரிடமிருந்து பெறப்பட்ட ஏதேனும் மற்றும் எல்லா விசாரணைகளையும் அவ்வாறு தெரிவுசெய்தால் வங்கி அவற்றுக்குப் பதிலளிப்பதற்கு நான் அதிகாரமளிக்கின்றேன்;

19.2.1 எனக்கான குறிப்பீடு இன்றி கணக்கு (கணக்குகள்) சம்பந்தமான தகவல்களைப் பெறுவதற்கு

சட்டரீதியாக அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவையேனும் வங்கிகள், கடன் தகவல் பணியகம் (CRIB) அல்லது வேறு எவரேனும் அதிகாரி

19.2.2 சட்டத்தினால் அல்லது நீதிமன்றக் கட்டளையினால் அத்தகைய வெளிப்படுத்துகையைச் செய்வதற்கு வங்கியைத் தேவைப்படுத்துகின்ற எவரேனும் ஆள்;

19.2.3 வங்கிக்கான அந்தரங்கத்தன்மை பற்றிய கடமையின் கீழ் உள்ள எவரேனும் ஆள்

19.2.4 எமது கணக்கு (கணக்குகள்) / வசதிகள் தொடர்பாக வங்கியின் எவையேனும் உரிமைகள் அல்லது கடப்பாடுகள் தொடர்பாக எவரேனும் உண்மையான அல்லது சாத்தியமான குறித்தளிக்கப்பட்டவர், பங்குபற்றுநர் அல்லது ஒப்பந்தத் திறத்தவர்.

19.3 மேலேயுள்ள நியதிநிபந்தனைகள் எமக்குத் தெளிவுபடுத்தப்பட்டு, வாசித்துக்காட்டப்பட்டு அவற்றை விளங்கிக்கொண்டோம் என நாம் இத்தால் உறுதிப்படுத்தி உடன்படுகின்றோம் என்பதுடன் Neos BIZ வசதியைப் பயன்படுத்துவதன் விளைவாக எழுகின்ற விதிப்பனவுகள் உட்பட மேலேயுள்ள நியதி நிபந்தனைகளினால் பிணிக்கப்படுவதற்கும் உடன்படுகின்றோம்.

(அமைப்பகவிதிகளின் படி)

…………………………	…………………………
பெயர்	பெயர்
…………………………	…………………………
பதவிப் பெயர்	பதவிப் பெயர்
………………………	………………………
கம்பெனி இலச்சினை (இருப்பின்)	திகதி
…………………………..	………………………………
என்பவரினால் சாட்சிப்படுத்தப்பட்டது	பெயர் மற்றும் தே.அ.அ. இலக்கம்
…………………………….	
திகதி	